கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

**அ.வ.எண். 74/2014**

2026ம் ஆண்டு ஜூன் மாதம் 10ம் நாள் புதன் கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியம்.

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிகளின் படி வள்ளியூர் முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி திருமதி.A.அன்னலெட்சுமி,M.L., அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | அருள்ராஜா | **சமயம்** | : | -- |
| **த/பெ** | : | கௌசாணல் | **வயது** | : | 55 |
| **கிராமம்** | : | -- | **தொழில்** | : | -- |
| **வட்டம்** | : | -- | | : | |

**பி.வா.சா.4: வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) உங்கள் சொந்த ஊர் தூத்துக்குடி என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை பொறுத்து எனக்கு ஆரம்ப காலம் முதல் தெரியும். நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் ராமலிங்கம் என்பவருக்கும், அவரது பிள்ளைகளுக்கும் பாத்தியப்பட்டது. ராமலிங்கம் பிள்ளைக்கு பின் யாருக்கு பாத்திப்பட்டது என்றால் அவரது குமாரர்களான சிவசுப்பிரமணிய பிள்ளை மற்றும் காந்தி மதி நாதன் ஆகியோருக்கு பாத்தியப்பட்டது. மேற்படி 2 நபர்களும் வழக்கு சொத்துக்களை பாகம் பிரித்து கொண்டனர். அந்த விவரமானது வங்கியின் ஆவணங்கள் மூலமாக தெரியும். சிவசுப்பிரமணியன் வாரிசுகள் வழக்கு சொத்துக்களை தமிழ்நாடு மெர்கண்டல் வங்கியில் ஆவணங்களை வைப்பீடு செய்து Equitable Mortgage ஏற்படுத்தியிருந்தார்கள்

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.06.10 18:29:47 +0530

என்றால் சரிதான். அசல் ஆவணங்களை வைப்பீடு செய்தார்களா அல்லது நகல்கள் எடுத்து வைப்பீடு செய்தார்களா என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அந்த ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதா,அல்லது பதிவு செய்யப்படாததா என்று எனக்கு தெரியாது. அவர்கள் எழுதிக் கொடுத்த Memoradum த்தை நான் பார்த்திருக்கிறேனா என்றால் நான் பார்த்ததில்லை. அதை பற்றி நீங்கள் விசாரணை செய்யவும் இல்லை என்றால் சரிதான்.

2) Tribunal ல் இருந்து வாங்கியதால் நான் விசாரிக்கவில்லை. நாங்கள் வழக்கு சொத்துக்களை வாங்கும் போது தான் அந்த சொத்தை பற்றிய விவரங்கள் தெரியும் என்றால் சரிதான். சொத்தை நீங்கள் வாங்கியதாக கூறுகிறீர்கள் அதன் அசல் பத்திரம் எங்கு உள்ளது என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். Tribunal ல் யார் யாருக்கு வழக்கு நடைபெற்ற விவரம் தெரியுமா என்றால் Tribunal ல் தமிழ்நாடு மெர்கண்டல் வங்கிக்கும், சிவசுப்பிரமணியன் வாரிசுக்கும் நடந்தது. நீங்கள் ஏலம் எடுத்ததாக கூறும் ஏலச்சான்றிதழ் பி.வா.சா.ஆ. 5 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 5 ஆவணத்தில் சிவசுப்புரமணியன் வாரிசுகள் பற்றிய விவரம் துலங்காது என்றால் சரியல்ல.

3) Tribunal ல் நடந்த வழக்கு குறித்த வழக்குரை, தீர்ப்பு முதலானவற்றை பார்வையிட்டால் தான் அந்த வழக்கு யார் யாருக்கிடையே எதற்காக நடைபெற்றது என தெரியும் என்றால் சரிதான்.. நீங்கள் அது தொடர்பான ஆவணங்களை நகல்கள் எதுவும் எடுத்து பார்க்கவில்லை என்றால் சரிதான். அதேபோல் Tribunal ல் வழக்கு சொத்து ஏலம் நடந்தது சம்பந்தமாக யார் யார் கலந்து கொண்டார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த ஏலத்தில் நீங்கள் கலந்து கொண்டீர்களா என்றால் கலந்து கொள்ளவில்லை. பி.வா.சா.ஆ. 5 ஏலம் குறித்த விவரங்கள் நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். Tribunal ல் சதிஷ் ஏலம் எடுத்ததாக

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.06.10 18:29:57 +0530

நீங்கள் கூறும் நிலையில், நீதிமன்றம் மூலமாக சொத்தினை சுவாதீனம் எடுத்தார்களா என்றால் வங்கி மூலமாக அளந்து எடுத்தார்கள் என்று சாட்சி பதிலளிக்கிறார். நீதிமன்ற அமினா மூலம் அளந்து எடுத்தார்களா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சுவாதீனம் எடுப்பதற்கு நீதிமன்றத்தில் மனு ஏதேனும் தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வங்கியிலிருந்து எந்த தேதியில் அளந்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

4) சொத்துக்களை சதிஷ் அடையாளம் காட்டினாரா என்றால் ஏலம் எடுப்பதற்கு முன்பு வங்கியிலிருந்து அழைத்து சென்று காண்பித்தார்கள். அதன் எல்கை விவரம் தெரியுமா என்றால் ஓரளவு தெரியும். நான்கு பக்க எல்கைகள் தெரியுமா என்றால் சாட்சி தெரியாது என்று பதிலளிக்கிறார். வங்கியிலிருந்து எந்த தேதியில், எந்த மாதம் இடத்தை பார்வையிடுவதற்கு என்னை அழைத்து சென்றார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. ஏலம் எடுப்பதற்கு முன் சொத்துக்களை பார்த்து வில்லங்கங்கள் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த சொத்தில் வில்லங்கங்கள் ஏதும் இல்லை. வா.சா.ஆ. 1 பாகப்பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். எப்போது பார்த்துள்ளேன் என்றால் ஏலம் எடுப்பதற்கு முன்பாக பார்த்தேன். அதில் வழக்கு சொத்துக்களில் பிரிவின்றி பாதி பங்கு சிவசுப்பிரமணியன் பிள்ளைக்கும்,மீதி பாதி சொத்தானது காந்திமதி நாதன் பிள்ளைக்கும் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

5) மேற்படி பத்திரத்தின் அசலை நீங்கள் பார்த்ததில்லை என்றால் சரிதான். வங்கியில் வைப்பீடு செய்த ஆவணமானது சார்பதிவாளர் நகலை தான் வைப்பீடு செய்திருந்தனர் என்றால் சரிதான். அந்த நகலை நாங்கள் வங்கியில் இருந்து பெற்றுக்கொண்டோம் என்றால் சரிதான். இந்த ஒரு ஆவணமும், காந்திமதியம்மாள் பெயரில் உள்ள பட்டா, தீர்வை ரசீது வைப்பீடு செய்யப்பட்டிருந்தது. இந்த

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.06.10 18:30:03 +0530

ஆவணங்கள் என் கைவசத்தில் தான் உள்ளது. மேற்படி ஆவணங்களை நீங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீங்கள் கூறுவது போல் பட்டா, தீர்வை ரசீது முதலானவைகள் வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நீங்கள் வங்கியில் இருந்து வாங்கும் போது வைப்பீடு செய்யப்பட்ட ஆவணங்களை கையோடு வாங்கிவிட்டேனா என்றால் வாங்கவில்லை. 25.09.1959 ல் சிவசுப்பிரமணிய பிள்ளை வழக்கு சொத்தில் ஒரு பங்கு சொத்தை கிரையம் செய்து கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது.

6) சாட்சியிடம் வா.சா.ஆ. 2 ஆவணத்தை காட்டி படித்து காண்பித்த போது அந்த பத்திரத்தை யார் யாருக்கு எழுதிக் கொடுத்தார்கள் என்று தனக்கு தெரியாது என்று சாட்சி கூறுகிறார். வாதி வழக்குரையில் மேற்படி பத்திரத்தை பற்றி கூறியுள்ளார் என்றால் சரிதான். அதன் பிறகு நீங்கள் நகல் எடுத்து பார்த்தீர்களா என்றால் நகல் எடுத்து பார்த்தோம். அது சம்பந்தமாக சிவசுப்பிரமணியன்வாரிசுகளை விசாரித்தீர்களா என்றால் அவருடை வாரிசு குறித்த விவரம் எனக்கு தெரியாது. சின்னக்கண்ணு தேவர் கிரையம் பெற்ற சொத்தையும் , வேறு நபர்கள் கிரையம் பெற்ற சொத்தையும் அவரது பொது அதிகார முகவர் ஒருவர் மூலமாக NEG மைக்கான் என்ற நிறுவனத்திற்கு 13.02.2003 ல் கிரையம் கொடுத்தார் அந்த விவரங்களை விசாரித்து பார்த்தேனா என்றால் விசாரித்து பார்த்தேன். போலியாக போடப்பட்டுள்ளது என்று சாட்சி கூறுகிறார். யார் மூலமாக விசாரித்தேன் என்றால் 2011ம் வருடத்தில் விசாரித்தேன்.

7) சேரன்மகாதேவி சார் ஆட்சியரிடம் விசாரணை நடந்தது. வில்லங்கம் சம்பந்தமாக உரிமையியல் நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுத்தேனா என்றால் நடவடிக்கை எடுக்கவில்லை. வருவாய் துறையில் நடவடிக்கை எடுத்தேன் என்று சாட்சி பதிலளிக்கிறார். வருவாய் துறையில் நடவடிக்கை எடுத்தது தொடர்பான

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.06.10 18:30:08 +0530

ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 2 மற்றும் 3 ஆவணங்கள் இந்நாள் வரை ரத்து செய்யப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 3 ஆவணத்தை அடிப்படையாக வைத்து வழக்கின் 2 ம் பிரதிவாதி பி.வா.சா.ஆ. 2 மூலம் வழக்க சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அதன் பின்னர் தான் வருவாய் துறையில் நடவடிக்கை மேற்கொண்டோம் என்று சாட்சி பதிலளிக்கிறார். வருவாய் துறை விசாரணைக்கு எதிர் தரப்பினர் ஆஜராகவில்லை என்று சாட்சி பதிலளிக்கிறார்.

8) நீங்கள் வருவாய் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனுவில் எதிர் தரப்பினராக யாரெல்லாம் சேர்த்துள்ளீர்கள் என்றால் ஞான திரவியத்தை மட்டும் எதிர் தரப்பினராக சேர்த்துள்ளேன். அவருக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டதற்கும் , அதன் உத்தரவு நகலையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 13.07.1931 தேதியில் அதிலுள்ள பங்குதாரரான காந்திமதி நாதன் வாரிசுகளும் பவர் அளித்துள்ளார்கள் என்றால் சரிதான்.

9) மேற்படி பவர் பத்திரத்தின் அடிப்படையில் தான் வாதி 05.01.2011 ல் வா.சா.ஆ. 8 மூலம் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். மேற்படி பவர் பத்திரம் சம்பந்தமாகதவும், கிரைய பத்திரம் சம்பந்தமாகவும் நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை ஏனென்றால் நாங்கள் அதற்கு முன்பாக கிரையம் பெற்றுவிட்டோம். ஆகவே நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று சாட்சி பதிலளிக்கிறார். மேற்படி கிரையம் ஆவணம் குறித்து இந்த வழக்கிற்கு பின்பு தான் எனக்கு தெரியும் என்று சாட்சி கூறுகிறார். அதற்கு நான் நகல் எடுத்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். தாவா வழக்கில் மேற்படி ஆவணங்களை ரத்து செய்ய கோரி எதிர் கோருரிமை

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.06.10 18:30:12 +0530

பரிகாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள கிரைய ஆவணம் அவருக்கு கிரையம் கொடுத்த பொது அதிகார முகவரின் பெயரில் உள்ள பொது அதிகார ஆவணங்கள் வா.சா.ஆ.2 25.09.1959 தேதியிட்ட ஆவணங்கள் அனைத்து உண்மையான ஆவணங்கள் என்றும், அவைகள் உண்மையான ஆவணங்கள் என்பதால் தான் அந்த ஆவணங்கள் சம்பந்தமாக உரிமையியல் நீதிமன்றத்தில் பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரியல்ல.

10) சிவசுப்பிரமணிய பிள்ளை வாரிசுகளுக்கு வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லாத நிலையில் அவர்கள் வங்கியில் அடமானம் ஏற்படுத்தியதாக சொல்லப்படும் Memorandum of Deposit of Title Deeds ம் அதன் அடிப்படையில் வங்கி Tribunal எடுத்த நடவடிக்கையும் நாங்கள் ஏலம் எடுத்ததாக சொல்லப்படும் பி.வா.சா.ஆ. 5 ஆவணமும் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. சிவசுப்பிரமணிய பிள்ளை அவரது பங்கு சொத்தை வா.சா.ஆ. 2 மூலமாக சின்னக்கண்ணு தேவருக்கு கிரையம் கொடுத்து அனுபவம் கொடுத்து விட்ட படியால் நான் கூறும் வங்கி ஆவணம் ஏதும் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. நான் வங்கியில் வைப்பீடு செய்யப்பட்ட ஆவணங்களையும், அது சம்பந்தமான Memoradum முதலானவைகளையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததிலிருந்து அவைகள் அனைத்தும் மோசடியானது என்று சொன்னால் சரியல்ல.

11) பி.வா.சா-ஆ. 5 மூலம் வழக்கு சொத்துக்களை பொறுத்து பட்டாவை எங்கள் ஆள்பலம் மற்றும் பணப்பலத்தை வைத்து 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்திக் கொடுத்தோம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் 1ம் பிரதிவாதிக்கு யாதொரு சொத்துரிமையும் இல்லாத காரணத்தால் வாதி கோரியபடி அவருக்கு தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. வழக்கு நான் சொல்வது போல்

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.06.10 18:30:17 +0530

ஏலச்சான்று அடிப்படையில் அதில் கண்ட சொத்தை சட்டப்படிக்கு நீதிமன்றம் மூலமாக வாழ்விப்பு செய்யாத காரணத்தினால், ஏலச்சான்றிதழானது நடைமுறைக்கு வரவில்லை என்றும் அதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு யாதொரு சொத்துரிமையும் ஏற்படாது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சொத்துக்கள் சம்பந்தமாக முன் நடவடிக்கைகள் யாதொன்றும் எனக்கு தெரியாது என்றும், நான் இந்த வழக்கிற்காக காலஞ்சென்று போன 1ம் பிரதிவாதிக்காகவும், அவரது மனைவியான 3ம் பிரதிவாதிக்காகவும் அவர் மீது அக்கறை கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூறிய சாட்சியம் சட்டப்படியாக ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வாதி கோரியபடி பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்க கேட்டு சரியென்று ஒப்புக் கொண்டு கையெழுத்து செய்தார்

ANNALAKSHMI

Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.06.10 18:30:23 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்